# வலுசக்தி அமைச்சு

## கேள்வி மனுக் கோரலுக்கான அழைப்பு (IFB)

வலுசக்தி அமைச்சிற்கு வாடகை அடிப்படையில் வாகன நிறுத்துமிட வசதிகளுடன் கூடிய அலுவலக வளாகத்தை பெற்றுக்கொள்ளுதல் - 2026/2027

**பெறுகை இலக்கம்: PE/AD/11/Rent a Building/2025/Proc.**

வலுசக்தி அமைச்சு வாடகை அடிப்படையில் வாகன நிறுத்துமிட வசதிகளுடன் கூடிய அலுவலக வளாகத்தை பெற்றுக்கொள்வதற்கு திட்டமிட்டுள்ளது. இதற்கிணங்க, இலங்கை வலுசக்தி அமைச்சின் சார்பாக, அமைச்சு பெறுகைக் குழுவின் (MPC) தலைவர், பின்வரும் குறைந்தபட்ச தேவைகளுடன் கூடிய அலுவலக கட்டடத்தை வாடகைக்கு பெற்றுக்கொள்வதற்கு தகுதியான மற்றும் தகுதிவாய்ந்த கேள்விமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விமனுக்களை இதன் மூலம் கோருகின்றார்:

- இடம்: கொழும்பு பகுதிக்குள் எளிதில் அணுகக்கூடிய வளாகங்கள், பத்தரமுல்ல மற்றும் ராஜகிரிய
- குறைந்தபட்ச தள பரப்பளவு: 40,000 சதுர அடி (அலுவலக வளாகங்களுக்கு மட்டும்)
- வசதிகள்: மின்சாரத்தின் மூலமான சுத்திகரிக்கப்பட்ட குழாய் நீர் விநியோகம் (NWS&DB), சுகாதார வசதிகள் மற்றும் தேவையான எண்ணிக்கையிலான மலசலகூடங்கள். தேவையான எண்ணிக்கையிலான மின் உயர்த்திகள். போதுமான வழிச்சீராக்கிகள் மற்றும் அதிகபட்ச காற்றோட்டம், மின்சாரம் தடைப்படும் போது தானாகவே இயங்கும் வகையிலான மின்பிறப்பாக்கி, தீ பாதுகாப்பு அமைப்புக்கள்.
- வாகன தரிப்பிடம்: குறைந்தபட்சம் 60 நான்கு சக்கர வாகனங்களை நிறுத்துவதற்கான இடம் (அலுவலக வளாகத்திற்குள் அல்லது 500 மீற்றர் சுற்றுவட்டத்திற்குள் வாகனங்களை நிறுத்துவதற்கான வசதிகள்)
- வாடகை காலம்: நீடிக்கக்கூடிய அடிப்படையிலான மூன்று (3) ஆண்டுகள்

தேசிய போட்டி கேள்விமனு (NCB) முறையின் ஊடாக கேள்விமனு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்.

### கேள்விமனு ஆவணங்களை பெற்றுக்கொள்ளுதல்:

ஆர்வமுள்ள மற்றும் தகுதியுள்ள கேள்விமனுதாரர்கள், 2025 செப்ரெம்பர் 29 ஆம் திகதி முதல் 2025 ஒக்டோபர் 22 ஆம் திகதி வரை எந்த வேலை நாளிலும் காலை முற்பகல் 9:00 மணி முதல் பிற்பகல் 3:00 மணி வரையான காரியாலய நேரங்களில் வலுசக்தி அமைச்சின் சிரேஸ்ட உதவிச் செயலாளரிடமிருந்து (வழங்கல்) கேள்விமனு ஆவணங்கள் மற்றும் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விமனு ஆவணங்களை பெற்றுக்கொள்ளும் போது, வலுசக்தி அமைச்சின் செயலாளரின் பெயரில் இலங்கை ரூபாய் இருபதாயிரம் (இலங்கை ரூபாய் 20,000.00) மீள பெற முடியாத கட்டணமாக செலுத்தப்படல் வேண்டும்.

கேள்விமனு ஆவணங்களை வலுசக்தி அமைச்சின் வழங்கல் பிரிவில் (2வது மாடி) இலவசமாகப் பார்வையிடலாம்.

அனைத்து கேள்விமனுக்களும், கேள்விமனு ஆவணத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தின் படி, 2026 பெப்ரவரி 18 ஆம் திகதி வரை செல்லுபடியாகும் வகையில் ரூபாய் 1,200,000.00 (1.2 மில்லியன்) பெறுமதியுள்ள, (கேள்விமனு செல்லுபடியாகும் திகதி + 28 நாட்கள்) பிணை முறி இணைக்கப்படல் வேண்டும். பூரணப்படுத்தப்படாத, சட்டவிரோத படிவத்தில் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விமனுக்கள் மற்றும் கேள்விமனு பிணை முறி இல்லாது சமர்ப்பிக்கப்பட்ட கேள்விமனுக்கள் நிராகரிக்கப்படும்.

கேள்விமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதி திகதியிலிருந்து 2026 ஜனவரி 21 ஆம் திகதி (91 நாட்கள்) வரை கேள்விமனுக்கள் செல்லுபடியாகும்.

முன்னரான கேள்விமனுக் கூட்டமொன்று 2025 ஒக்டோபர் 09ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு வலுசக்தி அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெறும். கேள்விமனுவை சமர்ப்பிப்பதற்கு தேவையான ஆவணங்கள் மற்றும் மேரதி விவரங்களுக்கு:
https://energymin.gov.lk

**சமர்ப்பிக்கப்பட வேண்டிய இறுதித்திகதி:**

முத்திரையிடப்பட்ட கேள்விமனுக்களுடன், **இரண்டு பிரதிகள்** மற்றும் அனைத்து துணை ஆவணங்களுடன், இவை கட்டாயம் இருக்க வேண்டும்:

- பதிவு தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும், அல்லது
- கீழே உள்ள முகவரிக்கு நேரடியாக வந்து வழங்கல் பிரிவில் உள்ள கேள்விமனு பெட்டியினுள் இடப்படல் வேண்டும்

2025 ஒக்டோபர் 22 ஆம் திகதி பிற்பகல் 01.00 மணிக்குள் அல்லது அதற்கு முன்னரோ சமர்ப்பிக்கப்படல் வேண்டும். தாமதமாக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

கேள்விமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதி திகதிக்குப் பின்னர், கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரியில் நேரில் பங்குபற்ற விரும்பும் கேள்விமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில், கேள்விமனுக்கள் உடனடியாகத் திறக்கப்படும்.

தயவுசெய்து கடித உறையின் மேல் இடது பக்க மூலையில் “வலுசக்தி அமைச்சிற்கு வாடகை அடிப்படையில் வாகனநிறுத்துமிட வசதிகளுடன் கூடிய அலுவலக வளாகத்தை பெற்றுக்கொள்ளுதல்” என்று தெளிவாகக் குறிப்பிடவும்.

**மேலதிக தகவல்களுக்கு:**

வழங்கல் பிரிவு,
வலுசக்தி அமைச்சு:
தொலைபேசி: 011-2574740 / 011-2574922 (Ext. 205, 206)
காரியாலய நேரம்: மு.ப 9:00. – பி.ப4:00 வரை

தலைவர்
அமைச்சு பெறுகைக் குழு
வலுசக்தி அமைச்சு
இல. 437, காலி வீதி, கொழும்பு 03
திகதி: 2025/09/26